# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.12.27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## ஆபாசமான வெளியீடுகளைத் தடைசெய்தல்

**ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை வெளியிடுதல், விநியோகித்தல், விற்பனைசெய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பனவற்றைத் தடைசெய்வதற்கும்; (30 ஆம் அத்தியாயமான) ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 42.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. ஓ. 21/2007*

**ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை வெளியிடுதல், விநியோகித்தல், விற்பனைசெய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பனவற்றைத் தடைசெய்வதற்கும்; (30 ஆம் அத்தியாயமான) ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, ஆபாசமான வெளியீடுகளைத் தடைசெய்தல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

## பாகம் I

### சட்டத்தின் ஏற்புடைமை

*சட்டத்தின் ஏற்புடைமை*

**2.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள்-

(அ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாகவமைகின்ற ஏதேனும் செயலானது, அத்தகைய தவறைப் புரிகின்ற ஆள் இலங்கையில் இருக்கின்றார் அல்லது இல்லாதிருக்கின்றார் என்பதனைப் பொருட்படுத்தாது இலங்கையில் இடம்பெறுமிடத்து;

(ஆ) ஆளொருவர் இலங்கையில் இருக்கையில், இச்சட்டத்தின் கீழான தவறொன்றை இலங்கையில் புரியுமிடத்து; அல்லது

(இ) எங்கேனும் புரியப்பட்ட இச்சட்டத்தின் கீழான தவறொன்று, இலங்கைப் பிரசையொருவராகவுள்ள ஆளொருவரினால் புரியப்படுமிடத்து,

ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் II

### ஆபாசமான வெளியீடுகள்

*ஆபாசமானதாகவுள்ள சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை வெளியிடுதல் முதலியன தவறொன்றாதல்*

**3.** (1) ஆளொருவர்-

(அ) ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை வெளியிடுதலாகாது, வெளிக்காட்டுதலாகாது, வாடகைக்கு விடுதலாகாது, விற்பனை செய்தலாகாது, விற்பனைக்கென முனைவு செய்தலாகாது, விநியோகித்தலாகாது அல்லது ஏதேனும் தொடர்பூடகத்தினூடாகப் புழக்கத்தினுள் ஏதேனும் முறையில் அறிமுகப்படுத்துதலாகாது;

(ஆ) பந்தி (அ) வில் தரப்பட்டுள்ள ஏதேனும் நோக்கத்துக்காக, ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் சடப் பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை இறக்குமதி செய்தலாகாது, ஏற்றுமதி செய்தலாகாது, ஆக்குதலாகாது, தயாரித்தலாகாது, அச்சிடுதலாகாது, கடத்துதலாகாது, இடம்பெயர்த்தலாகாது, உடைமையில் வைத்திருத்தலாகாது அல்லது அது தொடர்பான எத்தகையதுமான வேறெந்தச் செயலையும் செய்தலாகாது; அல்லது

(இ) (i) ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள் பெறுகைக்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ளதென; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றாகவமைகின்ற ஏதேனும் செயலில் பயன்படுத்தப்படுவதற்காக எவரேனுமாளின் சேவைகள் கிடைக்கக்கூடியன வாகவுள்ளனவென அல்லது தேவைப்படு கின்றதென,

விளம்பரப்படுத்துதலாகாது அல்லது ஏதேனும்தொடர்பூடகத்தினுள் அல்லது விளம்பரத்தினுள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு அதிகார மளித்தலாகாது அல்லது அனுமதித்தலாகாது அல்லது எத்தகையனவுமான வேறெவையேனும் வழிவகைகள்மூலம் தெரியப்படுத்தலாகாது.

(2) சட்டமுறையான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தை யாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்று அளிக்கப்படும் பட்சத்தில், இருபதாண்டுகளுக்கு நீடிக்கக்கூடியவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் III

### சிறுவர்கள் தொடர்பான ஆபாசமான வெளியீடுகள்

ஆபாசமான தாகவுள்ள சடப்பொருள் முதலியவற்றுக்குச் சிறுவர்களை உள்ளாக்குவது முதலியன தவறொன்றாதல்

**4.** (1) ஆளொருவர்-

(அ) ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் சடப்பொருளுக்கு, பருப்பொருளுக்கு அல்லது பொருளுக்கு சிறுவரொரு வரை உள்ளாக்குதலாகாது அல்லது அதனை சிறுவரொருவருக்கு கிடைக்கக்கூடியதாக்குதலாகாது; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் தரப்பட்டுள்ள ஏதேனும் நோக்கத்துக்காக, ஆபாசமானதாகவுள்ளதும் சிறுவரொருவரை, சிறுவரொருவராகவிருப்பதாகத் தோன்றுகின்ற

ஆளொருவரை அல்லது சிறுவரொருவரைக் குறிக்கின்ற உண்மையான உருவங்களைக் கட்புலரீதியில் குறித்துக்காட்டுகின்றதுமான ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை இறக்குமதி செய்தலாகாது, ஏற்றுமதிசெய்தலாகாது, ஆக்குதலாகாது, தயாரித்தலாகாது, அச்சிடுதலாகாது, கடத்துதலாகாது, இடம்பெயர்த்தலாகாது அல்லது ஏதேனும் ஊடகத்தில் உடைமையில் வைத்திருத்தலாகாது அல்லது அது தொடர்பாக எத்தகையதுமான வேறெந்தச் செயலையும் செய்தலாகாது.

(2) சட்டமுறையான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்று அளிக்கப்படும் பட்சத்தில் ஆறாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆபாசமான தாகவுள்ளதும் பாலியல்ரீதியாக வெளிப்படுத்து கின்ற நடத்தையில் ஈடுபட்டுள்ள சிறுவரொரு வரைக் கட்புலரீதியில் குறித்துக் காட்டுகின்றது மான சடப்பொருள் முதலியவற்றை வெளியிடுதல் முதலியன தவறொன்றாதல்

**5**. (1) ஆளொருவர்-

(அ) ஆபாசமானதாகவுள்ளதும், பாலியல்ரீதியாக வெளிப்படுத்துகின்ற நடத்தையில் ஈடுபட்டுள்ள சிறுவரொருவரை, சிறுவரொருவராகவிருப்பதாகத் தோன்றுகின்ற ஆளொருவரை அல்லது சிறுவரொருவரைக் குறிக்கின்ற உண்மையான உருவங்களைக் கட்புலரீதியில் குறித்துக்காட்டுகின்றதுமான ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை வெளியிடுதலாகாது, வெளிக்காட்டுதலாகாது, வாடகைக்கு விடுதலாகாது, விற்பனை செய்தலாகாது, விற்பனைக்கென முனைவுசெய்தலாகாது, விநியோகித்தலாகாது அல்லது ஏதேனும் தொடர்பூடகத்தினூடாக எம்முறையிலேனும் புழக்கத்தினுள் அறிமுகப்படுத்துதலாகாது; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் தரப்பட்டுள்ள ஏதேனும் நோக்கத்துக்காக, ஆபாசமானதாகவுள்ளதும், பாலியல்ரீதியாக வெளிப் படுத்துகின்ற நடத்தையில் ஈடுபட்டுள்ள சிறுவ ரொருவரை, சிறுவரொருவராகவிருப்பதாகத் தோன்று கின்ற ஆளொருவரை அல்லது சிறுவரொருவரைக் குறிக்கின்ற உண்மையான உருவங்களைக் கட்புலரீதியில் குறித்துக்காட்டுகின்றதுமான ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை இறக்குமதி செய்தலாகாது, ஏற்றுமதிசெய்தலாகாது, ஆக்குதலாகாது, தயாரித்தலாகாது, அச்சிடுதலாகாது, கடத்துதலாகாது, இடம்பெயர்த்தலாகாது அல்லது ஏதேனும் தொடர்பூடகத்தில் உடைமையில் வைத்திருத்தலாகாது அல்லது அது தொடர்பாக எத்தகையதுமான வேறெந்தச் செயலையும் செய்தலாகாது.

(2) சட்டமுறையான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல்–

(அ) ஓராம் உட்பிரிவின் பந்தி (அ) இன்கீழான தவறொன்றின் விடயத்தில், மூன்றாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரானவொரு குற்றத்தீர்ப்பளிக்கப்படும்பட்சத்தில் மூன்றாண்டுகளுக்குக்

குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமான வொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன்கீழான தவறொன்றின் விடயத்தில், இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரானவொரு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டு களை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IV

### கணனி முறைமையைப் பயன்படுத்துவதனூடாகச் சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டல்

ஒரு கணனியினூடாக சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டு தலைக் கிடைக்கக் கூடியன வாக்குதல் தவறொன்றாதல்

**6**. (1) ஆளொருவர்-

(அ) கணனி முறைமையொன்றைப் பயன்படுத்தி தனக்காக அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டுதலை தயாரித்தலாகாது அல்லது கிடைக்கக்கூடியதாக்குதலாகாது, ஏதேனும் முறையில் முனைதலாகாது, விநியோகித்தலாகாது, கடத்துதலாகாது அல்லது பெற்றுக்கொடுத்தலாகாது;

(ஆ) கணனியொன்றில் அல்லது கணனித் தரவுத் தேக்க ஊடகமொன்றின் மீது, சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டுதலை உடைமைகொண்டிருத்தலாகாது அல்லது கைக்கொண்டிருத்தலாகாது;

(இ) கணனியொன்றின் வழிமுறைகள் ஏதேனும் ஆபாசமான மற்றும் பாலியல்ரீதியாக வெளிப்படுத்துகின்ற சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள் சிறுவரொருவரை உள்ளாக்குதலாகாது; அல்லது

(ஈ) சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டுதலுக்கு கணனி முறைமையொன்றினூடாக அணுக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதலாகாது.

(2) சட்டமுறையற்ற காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையி லொருவகை மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) (அ) கணனியொன்றின் வழிவகைகள்மூலம் சேவை யொன்றை வழங்குகின்ற எவரேனுமாள், சிறுவரொருவர் அத்த கைய சேவையைப் பயன்படுத்துவதன்மூலம் ஆபாசமான மற்றும் பாலியல்ரீதியாக வெளிப்படுத்துகின்ற சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருளை அணுகாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) சட்டமுறையான காரணமின்றி இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையி லொருவகை மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(இ) இவ்வுட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், அத்தகைய சேவையைப் பயன்படுத்துகின்ற எவரேனும் சிறுவர், பாலியல்ரீதியில் வெளிப்படுத்துகின்ற சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருளை அணுகுவதனைத் தடுப்பதற்குத் தாம் நியாயமான எல்லா முற்காப்புகளையும் எடுத்திருந்தாரென எண்பிப்பது, அத்தகைய ஆளுக்கு எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

(4) (அ) ஆளொருவர், பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அல்லது சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டுதலைத் தயாரிப்பதற்காக சிறுவரொருவரைச் சந்திப்பதற்கு தகவல் மற்றும் தொடர்பு தொழினுட்பவியல்களினூடாக முன்மொழிதலாகாது.

(ஆ) சட்டமுறையான காரணமின்றி இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

"சிறுவர் காமவெழுச்சி வெளிக்காட்டுதல்" என்பது, ஆபாசமானதாகவுள்ளதும் உண்மையாக அல்லது உருப்போலியாக பாலியல்ரீதியாக வெளிப்படுத்துகின்ற நடத்தையில் ஈடுபட்டுள்ள சிறுவரொருவரை அல்லது சிறுவரொருவராகவிருப்பதாகத் தோன்றுகின்ற ஆளொருவரை அல்லது சிறுவரொருவரைக் குறிக்கின்ற உண்மையான உருவங்களைக் கட்புலரீதியில் குறித்துக்காட்டுகின்றதுமான ஏதேனும் சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள் அல்லது பிரதானமாகப் பாலியல் நோக்கங்களுக்காக சிறுவரொருவரின் பாலியல் உறுப்புக்களின் ஏதேனும் குறித்துக்காட்டுகை என்று பொருளாகும்;

"கணனி முறைமை" என்பது, எந்த உபாயமொன்று அல்லது ஒன்றோடொன்று தொடர்புபட்ட அல்லது தொடர்புடைய உபாயங்களின் தொகுதி, அதில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை, அத்தகைய முறைமைகளில் அல்லது உபாயத்தில் அடங்கியுள்ள வொரு செய்நிரலைப் பின்பற்றித் தரவுகளின் தன்னியக்கமான செய்முறைப்படுத்துகையைப் புரிகின்றதோ அந்த ஏதேனும் உபாயம் அல்லது ஒன்றோடொன்று தொடர்புபட்ட அல்லது தொடர்புடைய உபாயங்களின் தொகுதி என்று பொருளாகும்;

"சேவை" என்பது, சிறுவர்கள் கணனியொன்றுக்கு அணுக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய வர்த்தக அடிப்படையொன்றின் மீது அல்லது கல்வி நிறுவனமொன்றினால் அல்லது ஏதேனும் பொது இடத்தினால் வழங்கப்படும் சேவையொன்றை உள்ளடக்கும்; அத்துடன்

"தேக்க ஊடகம்" என்பது, வேறேதேனும் பொருளின் அல்லது உபாயத்தின் உதவியுடனோ அல்லது அதுவின்றியோ எந்த இலத்திரனியல் அல்லது ஒத்த உபாயத்திலிருந்து தகவலை அணுகிப் பெறுவது இயலுமானதாகவுள்ளதோ அந்த ஏதேனும் இலத்திரனியல் அல்லது அதையொத்த உபாயம் என்று பொருளாகும்.

## பாகம் V

### புலனாய்வு

**7.** இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தால் தவிர, இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் புலனாய்வு செய்யப்படுதல், விளக்கத்திற்கு உட்படுத்தப்படுதல் அல்லது வேறுவகையில் கையாளப்படுதல் வேண்டும். புலனாய்வு

நிபுணர்களும் அவர்களின் தத்துவங்களும் பணிகளும்

**8**. (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம், தகவல் தொழினுட்பவியலில் துறையில் அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்ட (இதனகத்துப்பின்னர் "நிபுணர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுபவரான) (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் ஆளொருவரை அல்லது ஆட்கள் குழுவை இச்சட்டத்தின்கீழான தவறொன்றுபற்றிய ஏதேனும் புலனாய்வில் எவரேனும் பொலிசு அலுவலருக்கு உதவுவதற்காக நியமிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் நிபுணரொருவரின் தகவல் தொழினுட்பவியல் துறையில் தகைமைகளையும் அனுபவத்தையும் மற்றும் அத்தகைய நிபுணரை நியமிக்கும் முறையும் மாதிரியும் நியமன நிபந்தனைகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறாக விருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக, ஏதேனும் புலனாய்வில் எவரேனும் பொலிசு அலுவலருக்கு உதவுவதற்கு அழைக்கப்பட்ட நிபுணரொருவர், அப்பொலிசு அலுவலரின் அதிகாரத்தின்கீழ் பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பொலிசு உப-பரிசோதகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலருடன் எவையேனும்வளவுகளில் உட்பிரவேசிப்பதற்கும்;

(ஆ) ஏதேனும் தகவல் முறைமையை, கணனியை அல்லது கணனி முறைமையை அல்லது அத்தகைய கணனியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் செய்நிரலை, தரவை அல்லது தகவலை அணுகுவதற்கும் ஏதேனும் கணனியானது ஏதேனும் பணியை நிறைவேற்றுவதனை அல்லது அத்தகைய ஏதேனும் வேறு காரியத்தைப் புரிவதனைச் செய்விப்பதற்கும்;

(இ) அத்தகைய புலனாய்வின் நோக்கத்திற்கு அவசியமான வாறான ஏதேனும் ஆவணத்தை, தகவலை, உபாயத்தை அல்லது வேறு விடயத்தைக் காண்பிக்குமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துவதற்கும்;

(ஈ) ஏதேனும் போக்குவரத்துத் தரவை வெளிப்படுத்துமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துவதற்கும்; அத்துடன்

(உ) எவரேனும் ஆளை வாய்மொழிமூலம் விசாரணை செய்வதற்கும்.

(4) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிபுணருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிபுணரொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்வதில் எவரேனும் பொலிசு அலுவலருக்கு உதவுவதற்கு அழைக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவிகளையும் அளித்தல் அத்தகைய நிபுணரின் கடமையாதலும் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றின் புலனாய்வின் கண்டு பிடிப்புகளின் விளைவாக ஏதேனும் வழக்குநடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவிடத்து, பின்வருவன நிபுணரின் கடமையாதல் வேண்டும்:-

(அ) அவ்வாறு செய்யுமாறு அழைக்கப்படின், அத்தகைய வழக்குநடவடிக்கைகளில் சான்றினைக் கொடுத்தலும்; அத்துடன்

(ஆ) அத்தகைய நடவடிக்கைமுறைகளின் நோக்கத்திற்கென அத்தகைய புலனாய்வின்போது அவரினால் பெறப்படக் கூடிய ஏதேனும் தகவல், தரவு, பொருள் அல்லது வேறு சடப்பொருளை கிடைக்கக்கூடியதாகச் செய்தலும்.

புலனாய்வில் உதவுவதற்கான கடமை

**9**. (1) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்று தொடர்பாக ஏதேனும் வெளிப்படுத்துகையைச் செய்வதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றில் ஒத்துழைப்பதற்கு நிபுணரொருவரால் அல்லது பொலிசு அலுவலரொருவரால் தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனும் ஆள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) ஒரு புலனாய்வின்போது அத்தகையவொரு நிபுணருக்கு அல்லது பொலிசு அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் சட்டரீதியான பிரயோகத்துக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அத்தகைய நிபுணரால் அல்லது பொலிசு அலுவலரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓராண்டுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சான்று

**10**. (1) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட தவறொன்று தொடர்பான ஏதேனும் பதிவீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று, இச்சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பில் குற்றவழக்கொன்று தொடர்பாக சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகள்பற்றி முதற்றோற்ற அளவிலான சான்றாதலும் வேண்டும்.

(2) ஒவ்வோர் ஆவணமும், பதிவேடும், இடாப்பும் அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதியும், நிபுணரொருவரால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டிருப்பதுடன் அத்தகைய ஆவணம், பதிவேடு, இடாப்பு அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதி எந்த ஆளின் அக்கறைகள் தொடர்பானதோ அந்த ஆளினால் உரியமுறையில் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பின், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்றோற்ற அளவிலான எண்பிப்பாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் குற்றவழக்கில், விடயத்துக் கேற்ப, நிபுணரினால் அல்லது பொலிசு அலுவலரொருவரினால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணம் சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகள்பற்றி முதற்றோற்ற அளவிலான சான்றாதலும் வேண்டும்.

(4) (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்குத்தொடுப்புக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக:-

"ஒரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதி" என்பது, அத்தகைய ஆவணம், சான்றிதழ், பதிவேடு அல்லது இடாப்பு அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதி எந்த ஆளின் அக்கறைகளுடன் தொடர்பானதோ அந்த ஆளினால் உண்மைப்பிரதியென அதனைச் சான்றுப்படுத்தி அத்தகைய பிரதியின் அடியில் எழுதப்பட்ட சான்றிதழொன்றுடனான பதிவீட்டின் பிரதியொன்று என்றும், அத்தகைய பதிவீடானது ஒரு தகவல் முறைமையில் அல்லது கணனியில் இலத்திரனியல், காந்த, கட்புலரீதியில் அல்லது வேறு எவையேனும் வழிவகைகள்மூலம் தேக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆவணம், சான்றிதழ், பதிவேடு அல்லது இடாப்பு அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதி எந்த ஆளின் அக்கறைகளுடன் தொடர்பானதோ அந்த ஆளினால் உண்மைப்பிரதியெனச் சான்றுப் படுத்தப்பட்ட அத்தகைய பதிவீட்டின் அச்சுப்பிரதி என்றும் பொருளாகும்; அத்துடன்

"ஆவணம்" என்பது, ஒரு சான்றிதழை, வெளிப்படுத்துகையை, தகவலை, தரவை, அறிக்கையை அல்லது வேறேதேனும் ஒத்த ஆவணத்தை உள்ளடக்கும்.

## பாகம் VI

### பொது

ஆட்கள் குழுக்களினாலான தவறுகள்

**11.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது-

(அ) அந்த ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவொன்றாயின், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழுவானது குழுமமொன்றாயின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறைப் புரிகின்றவராகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலரொருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளரொருவர், அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின், அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளர் அத்தகைய தவறைப் புரிகின்றவராகக் கருதப்படுதலாகாது.

நட்டஈடு

**12.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும், எந்த ஆபாசமானதாகவுள்ள சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள் தொடர்பில் அவ்வாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதோ அந்த ஆபாசமானதாகவுள்ள சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள், சிறுவரொருவரைக் கட்புலரீதியில் குறித்துக்காட்டுகின்ற விடத்தும், நீதிமன்றமானது, அத்தகைய சிறுவரின் ஆளடையாளத்தை நிச்சயிக்கமுடியுமாகவிருக்குமிடத்து, இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய வேறேதேனும் தண்டனை மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் நட்டஈட்டிற்கு மேலதிகமாக அத்தகைய சிறுவருக்கு நட்டஈடு செலுத்தப்படுவதற்கான கட்டளையையும் ஆக்குதல் வேண்டும்.

**13.** பின்வருவனவற்றின் உடைமையை, கட்டுப்பாட்டை அல்லது கட்டுக்காப்பை வைத்திருக்கும் எவரேனும் ஆள்:- ஊகங்கள்

(அ) இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்டவொரு தவறு தொடர்பாக, இலத்திரனியல் வடிவத்திலாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, ஓர் ஆவணம், சான்றிதழ், பதிவேடு அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதி;

(ஆ) புலனாய்வுகளின்போது பொலிசு அலுவலரினால் கைப்பற்றப்பட்ட படங்கள் உள்ளடங்கலாக எல்லா ஆதனங்களும்; அல்லது

(இ) மேலே குறித்துரைக்கப்பட்ட தவறுகளைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனம்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிதலுடன் தொடர்புபட்ட அல்லது அதன் நோக்கத்திற்காக அத்தகைய ஆவணத்தை, சான்றிதழை, பதிவேட்டை, இடாப்பை அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதியைப் பயன்படுத்தியுள்ளாரென முரணானது எண்பிக்கப்படும் வரையில் ஊகிக்கப்படுதல் வேண்டும்.

**14.** நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, புலனாய்வுகளின்போது பொலிசு அலுவலரினால் கைப்பற்றப்பட்ட பணங்கள் உட்பட்ட எல்லா ஆதனங்களும், அத்தகைய ஆதனங்களுக்கான தமது சட்டமுறையான உரிமையை நிலைநாட்டுகின்ற ஆளுக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும். ஆதனம்

**15.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் நியதிகளின்படியான தவறொன்று, அச்சட்டத்தின்கீழ் மீள ஒப்படைத்தல் நோக்கத்திற்காக மாத்திரம் அரசிறைத் தவறொன்றாகவோ அல்லது அரசியல் தன்மையினதான தவறொன்றாகவோ அல்லது ஓர் அரசியல் தவறுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாகவோ அல்லது அரசியல் உள்நோக்கங்களினால் தூண்டப்பட்டதாக இராததாகக் கருதப்படுதல் வேண்டும். மீள ஒப்படைத்தற் சட்டம் தொடர்பான பொருள் கோடல்

கோரிக்கை விடுக்கும் அரசுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை

**16**. இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளை மீள ஒப்படைத்தற்காக வேறொரு நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில், இலங்கை அரசாங்கத்திற்குக் கோரிக்கையொன்று விடுக்கப்படுகின்றவிடத்து, வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், கோரிக்கை விடுக்கின்ற அரசின் அரசாங்கத்திற்கு அத்தவறுக்காக அந்த ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்ப தற்காக அல்லது அவரை மீள ஒப்படைப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் அல்லது எடுக்க உத்தேசித்துள்ள வழிமுறைகள் பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

நாடுகளுக்கும் ஒழுங்கமைப்பு களுக்குமான உதவி

**17**. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் புலனாய்வுக்கும் குற்றவழக்குத் தொடுப்பிற்கும் அவசியமானவிடத்தெல்லாம், இலங்கை அரசாங்கத்திற்கும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்கும் இடையே உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட ஆட்களின் உரிமைகள்

**18**. (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்காக இலங்கைப் பிரசையாக இல்லாத ஆளொருவர் கைதுசெய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள்-

(அ) அவர் எந்த அரசின் நாட்டினத்தவராகவுள்ளாரோ அல்லது அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எந்த அரசு வேறுவகையில் உரித்துடையதாகவுள்ளதோ அந்த அரசின் மிக்க அண்மையிலுள்ள தோதான பிரதி நிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆளாயின், அவர் வழமையாக வாழ்ந்த ஆள்புலத்திலுள்ள அரசின் மிக்க அண்மையிலுள்ள தோதான பிரதிநிதியுடன் தாமத மின்றித் தொடர்புகொள்வதற்கும்; அத்துடன்

(ஆ) அந்த அரசின் பிரதிநிதியொருவரால் பார்வையிடப் படுவதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

(2) பதினாறாம் பிரிவின்கீழான கோரிக்கையொன்று, 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான ஏதேனும் தவறுதல் காரணமாக ஏதேனும் சட்ட வழக்குநடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகச் செல்லுபடியற்றதாக்கப்பட்டதாகக் கருதப்படலாகாது; ஆயினும், அத்தகைய கோரிக்கையைத் தகுந்தமுறையில் நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு அந்த ஏற்பாடுகளுடனான போதிய இணங்கியொழுகுகை இருத்தல் வேண்டும்.

*தவறொன்றின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள வேறு அரசுகளுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை*

**19**. (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்காக ஆளொருவர் கைதுசெய்யப்படுகின்றவிடத்து, இச்சட்டத்தின் நிருவாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர், அத்தகைய ஆள் தொடர்பில் 16 ஆம் பிரிவின்கீழான கோரிக்கை யொன்றை விடுத்துள்ள வேறு ஏதேனும் அரசிலுள்ள இயைபான அதிகாரிகளுக்கு இலங்கை அந்த ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவரை மீள ஒப்படைப்பதற்காக எடுக்க உத்தேசித்துள்ள வழிமுறைகள் பற்றி அறிவிக்கும்படி வெளிநாட்டலு வல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு நேரொத்ததாகவுள்ள தவறொன்றிற்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட எவரேனும் ஆளை மீள ஒப்படைப்பதற்காக 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின்கீழ் விடுக்கப்பட்டதும் அவரை மீள ஒப்படைத்தற்கானதுமான கோரிக்கையொன்று ஏதேனும் அரசின் அரசாங்கத்தினால் அச்சட்டத்தின்கீழ் விடுக்கப்படுவதனைப் பின்பற்றிக் கட்டளை யெதுவும் ஆக்கப்படலாகாதென முடிபுசெய்யப்படுகின்றவிடத்து, அவ்விடயம் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்; அவர்கள் இலங்கையின் சட்டத்தின்கீழ் அத்தவறுக்கான குற்றவழக்குத்தொடுப்பை அல்லது தோதான வேறெவையேனும் நடவடிக்கைகளைக் கவனத்துட்கொள்ளலாம்.

மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடு தொடர்பான ஏற்பாடு

**20.** இலங்கை அரசாங்கத்திற்கும் வேறேதேனும் அரசின் அரசாங்கத்திற்குமிடையே ஒரு மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடு வலுவிலிருக்கின்றவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பிலும் அத்தகைய தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் அல்லது சதிசெய்தல் அல்லது உதவுதல் மற்றும் உடந்தையாகவிருத்தல் என்பன தொடர்பிலும் மீள ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

வேறு அரசுகளுக்கு உதவியளித்தல் அரசாங்கத்தின் கடமையாகும்

**21.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்கு நேரொத்ததாக வுள்ளதும் ஏதேனும் வெளிநாட்டு அரசின் சட்டத்தின்கீழானதுமான தவறொன்று தொடர்பில், எவரேனும் ஆளுக்கு எதிராக அவ்வரசில் தொடுக்கப்பட்ட குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் சம்பந்தமாக அவசியமாகக்கூடியவாறான அந்த வெளிநாட்டு அரசின் இயைபான அதிகாரிகளுக்கு (அதனது கையாளுகையிலுள்ள ஏதேனும் இயைபான சான்றை வழங்குதல் உள்ளடங்கலாக) இலங்கை அரசாங்கமானது அத்தகைய உதவியை வழங்குதல் வேண்டும்.

மேல்நீதிமன்றம் நியாயாதிக் கத்தைக் கொண்டிருத்தல்

**22.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழான தவறொவ்வொன்றும் அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டதும் கொழும்பில் நடைபெறுவதுமான மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.

வழக்குக் கெதிரான பாதுகாப்பு

**23.** (1) எவரேனும் நிபுணர் அல்லது பொலிசு அலுவலர் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென நன்னோக்கில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்ட செயலுக்காக ஏதேனும் துடர்ச்சி அல்லது வேறு சட்ட வழக்குநடவடிக்கைகளில் பொறுப்பாதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் நிபுணரொருவரினால் அல்லது பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக அத்தகைய நிபுணர் அல்லது பொலிசு அலுவலருக்கெதிராக நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளில் அவரால் உறப்பட்டனவான எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளில் அத்தகைய செலவுகள் அவரால் அறவிடப்பட்டா லொழிய, அத்தகைய நிபுணருக்கு அல்லது பொலிசு அலுவலருக் கெதிரான ஏதேனும் பிழையான நடத்தையைச் சார்த்துகின்ற ஆளினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

*சிறுவர்களை உட்படுத்துகின்ற தவறுகளுக்கான தண்டனை*

**24**. இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்காகச் சிறுவரொருவரைப் பயன்படுத்துகின்ற எவரேனு மாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டு களை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கும் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்று அளிக்கப்படும் பட்சத்தில், இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

*சிறுவர்களாக வுள்ள தவறாளர் களுக்குக் குறைவான தண்டனை*

**25**. இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குச் சிறுவரொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, இதன்கண் ஏற்பாடு செய்யப்பட்டதற்குக் குறைவான தண்டனையொன்றை நீதிமன்றம் விதிக்கலாம்.

தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல்

**26.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தகைய தவறுகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடுசெய்யப்பட்ட ஆகக்கூடிய காலத்தின் ஓரரைவாசியை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய தவறுக்கு ஏற்பாடுசெய்யப்பட்ட ஆகக்குறைந்த குற்றப்பணத்தின் ஓரரைவாசிக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தவறொன்றுக்கு உடந்தையளித்தல் தவறொன்றாதல்

**27.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையளிக்கும் எவரேனுமாள், உடந்தையளித்தல் என்ற தவறைப் புரிகின்றாரென்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்–

(அ) உடந்தையளிக்கப்பட்ட தவறு, உடந்தையளித்தலின் விளைவாகப் புரியப்படின், அத்தவறுக்காக ஏற்பாடு செய்யப்படுகின்றவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தவறானது உடந்தையளித்தலின் விளைவாகப் புரியப்படாதிருப்பின், அத்தவறுக்கு ஏற்பாடுசெய்யப்பட்ட ஆகக்கூடிய காலத்தின் நான்கிலொரு பகுதியை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஆகக்குறைந்த குற்றப்பணத்தின் நான்கிலொரு பங்குக்குக் குறையாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) "உடந்தை" என்ற பதம், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம், 101 ஆம் பிரிவுகளிலுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், தண்டனைச் சட்டக்கோவையின் 101அ, 103, 104, 105, 106 அத்துடன்

107 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கு உடந்தையளித்தல் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

தவறொன்றைப் புரிவதற்குச் சதிசெய்தல்

**28.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்குச் சதிசெய்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், அத்தவறைப் புரிவதற்கு உடந்தையளிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட தண்டனையினால் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) "சதிசெய்தல்" என்ற பதம், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 113அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்கான சதி தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகள், பிடியாணையின்றிக் கைதுசெய்யத் தக்கவையாகவும் பிணையில் விடுபடற்பாலனவல்லாதவையாகவும் இருத்தல்

**29.** இச்சட்டத்தின்கீழான ஒவ்வொரு தவறும்–

(அ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் கருத்துக்குட்படப் பிணையில் விடுபடற்பாலதல்லாத தவறொன்றாதல் வேண்டும்.

ஆபாசமானதாகவுள்ள பிரசுரம் முதலியனவற்றை அழித்து விடுவதற்கான கட்டளைகள்

**30.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான எவரேனுமாளின் விளக்கம் முடிவுற்றதன்மேலும், அத்தகைய ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பினும் அல்லாவிடினும், நீதிமன்றமானது, தவறின் விடயப்பொருளாகவமைகின்ற சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள் ஆபாசமானதாகவுள்ளதென அது அபிப்பிராயப்படின், அது தகுதியானதெனக் கருதுகின்றவாறான

அத்தகைய முறையில் அத்தகைய சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை அழித்துவிடுவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தில் நல்லெண்ணத்துடனான அக்கறையைக் கொண்டிருக்கக்கூடிய ஆளொருவரின் ஏதேனும் உரிமைக் கோரிக்கைக்கமைய, அத்தகைய தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட அத்தகைய ஆதனத்தை அரசுக்கு இழப்பிப்பதற்கான கட்டளையை நீதிமன்றம் ஆக்குதல் வேண்டும்.

ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தை நீக்குதல்

**31**. (30 ஆம் அத்தியாயமான) ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச்சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

பொருள் கோடல்

**32**. இச்சட்டத்தில்–

“சிறுவர்” என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆளொருவர் என்று பொருளாகும்;

“சடப்பொருள், பருப்பொருள் அல்லது பொருள்” என்பது, ஏதேனும் ஊடகத்திலான ஏதேனும் எழுத்து, வரைதல், அச்சுப்பிரதி, ஓவியம், அச்சிடப்பட்ட விடயம், படம், சுவரொட்டி, சின்னம், நிழற்படம், திரைப்படச்சுருள், திரைப்படம் அல்லது ஏதேனும் தரவு என்பனவற்றை உள்ளடக்கும்; அத்துடன்

“ஆபாசமானதாகவுள்ள” என்பது, ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளைத் தனியாக எடுக்கும்போது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெளிவான ஆக்கக்கூறுகளை அது கொண்டுள்ளவிடத்து தனியாக எடுக்கப்படும் அத்தகைய ஒவ்வோர் ஆக்கக்கூறும், நியாயமான மனிதரொருவரின் மனதில் நடத்தைக் கேட்டை ஏற்படுத்துவதற்கும் மனதைச் சிதைப்பதற்கும்

போதியதாகவுள்ள அத்தகைய சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை உள்ளடக்கும், ஆனால், அறிவியல், இலக்கியம், கலை, கல்வி அல்லது கற்றலின் அக்கறையில் செய்யப்பட்ட எவற்றையும் அடக்கியுள்ள ஏதேனும் சடப்பொருளை, பருப்பொருளை அல்லது பொருளை உள்ளடக்குவதில்லை.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**33.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.